செ. கு. எண்: 001 நாள் :06.01.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின் அறிக்கை – 6.1.2015

மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்கள் மூலம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள **42,736 ஏக்கர்** நிலங்களின் பாசனத்திற்காக 15.8.2014 முதல் ஏற்கெனவே தண்ணீர் திறந்து விடப்பட்டு, அப்பகுதிகளில் பாசனங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தற்போது அப்பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெல், விளைச்சலுக்கு தயாராகாத நிலையில் உள்ளதால் 7.1.2015 முதல் 15.2.2015 வரை மேலும் 40 நாட்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால்கள் மூலம் பாசனத்திற்காக 7.1.2015 முதல் 15.2.2015 வரை மேலும் 40 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள **42,736 ஏக்கர்** நிலங்கள் பயன் பெறும்

**ஓ.பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**